விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

28.08.2020 வெள்ளிக்கிழமை

## விக்னேஸ்வரன் உரையால் சபையில் நேற்றும் சர்ச்சை

கொழும்பு, ஒக 28

பாராளுமன்றத்தில் மேற்கொண்ட சத்திய பிரமாணத்தை மீறும் வகையில் கருத்து வெளியிட்ட விக்னேஸ்வரனை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட எம்.பி நளின் பண்டார வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று முற் பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

02

## முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்த

# விக்கி, கஜேந்திரகுமார் மீது உரிய விசாரணை வேண்டும்

### சரத் வீரசேகர சபையில் கடும் சீற்றம்



கொழும்பு, ஒக 28

நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னதாக முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபிக்குச் சென்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய இரா ஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை குறித்து கடும் விமர்சனங்களை முன் வைத்தார்.

02

## கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவு நிரந்தரமல்ல!

### கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஒக 28

தமிழ் மக்கள் தங்களைத் தாங் களே ஆளுகின்ற அதிகாரம் கிடைக்க வேண்டும். அந்த இலக்கை அடையத் தொடர்ந் தும் உழைக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங் கம் சித்தார்த்தன்

02

## பாராளுமன்றம் வருகிறார் உதித்த லொக்கு பண்டார!

கொழும்பு, ஒக 28

ராஜபக்ஷக்களின் உறவினரான உதித்த லொக்குபண்டார விரைவில் பாராளுமன்றம் வரவுள்ளார் என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது.

இதற்காக பதுளை மாவட்டத்தி லிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான உறுப்பினரொருவர் பதவி துறக்கவுள்ளார் எனவும், அவர் ஊவா மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார் எனவும் அரச உயர்மட்ட பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பதுளை

02

## தமிழரின் அடையாளங்களை அழிக்கவா கிழக்கு செயலணி?

### சபையில் நிர்மலநாதன் கேள்வி



கொழும்பு, ஒக 28

தமிழர்களின் வரலாறு, கலாசார அடையா ளங்களை அழித்து பௌத்த சிங்கள மயமாக் கலை ஏற்படுத்தவா தமிழர்கள் இல்லாத கிழக்கு மாகாணத் தொல்பொருள் செயலணி அமைக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய அரசின் இடைக்கால கணக் கறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

02

## மாகாணசபைத் தேர்தலில் தீவிரம் காட்டுகிறது அரசு!

கொழும்பு, ஒக 28

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் திகதியை நிர்ணயிக்கும் பணியில் கோட்டாபய அரசு ஈடுபட் டுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

இதன்படி 2021 பெப்ரவரி முற்பகுதி யில் மாகாணசபைத் தேர்தல் நடைபெற லாம் எனவும், பழைய முறைமையின் கீழ் 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் இடம்பெறும் எனவும் அந்த வட்டாரங்களில் இருந்து மேலும் தெரியவருகிறது.

அடுத்த நான்கு மாதங்களுக் கான இடைக்கால கணக்கறிக் கையில் மாகாணசபைகள்

02

## பேராசிரியர் சிறிசற்குணராஜா யாழ்.பல்கலை துணைவேந்தர்



யாழ்ப்பாணம், ஒக 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக கணிதப் புள்ளி விபரவியல்துறையின் மூத்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்துக்கமைவாக, ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத் தின் படி ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ

02

## ஒரே நாடு ஒரே சட்டம் என்பதாயின் அரசியல் கைதிகளை விடுவியுங்கள்!

### சபையில் சாணக்கியன் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக 28

ஒரே நாடு ஒரே சட்டம் என்றால், சிங்களக் கைதி களை விடுவித்தது போல, தமிழ் அரசியல் கைதிகளை யும் விடுதலை செய்யுங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தல் வலி யுறுத்தினார்.

இடைக்கால கணக் கறிக்கை மீதான விவாதத் தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

02



## விக்கி, கஜேந்திரகுமார்...

குறிப்பாக கடந்த வாரம் முள்ளிவாய்க் கால் நினைவுத்தூபிக்கு முன்பாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான விக் னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம் பலம், அங்கு உத்தியோகபூர்வமற்ற பதவிப்பிரமாணத்தை செய்துகொண்ட னர் எனவும், அது குறித்து அவர்களிடம் விசாரணை செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## தமிழரின்...

இதனையடுத்து, இடம்பெற்று வரும் விவாதத்தில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "கடந்த பொதுத் தேர் தலுக்கு முன்பாக கிழக்கு மாகாணத் தொல் பொருள் மரபுரிமையை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் செயலணியொன்ற அமைக்கப்பட்டது.

12 பேர் அங்கம் வகிக்கும் அந்தச் செய லணியில் தமிழர் ஒருவர்கூட உள்வாங்கப் பட்டிருக்கவில்லை. அதனையடுத்து, அதற்கு தமிழர் தரப்பில் எதிர்ப்பு வெளி யிடப்பட்டதுடன், அதில் தமிழர்களும் உள்வாங்கப்படவேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், கடந்த பொதுத் தேர்தலின் பின்னர், அந்தச் செயலணி யின் உறுப்பினர்களாக மேலும் நால்வர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்களிலும் தமிழர்கள் ஒருவர்கூட உள்வாங்கப்படவில்லை. கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரி மையைப் பாதுகாக்கும் செயலணியில் தமிழர் ஒருவர்கூட ஏன் நியமிக்கப்ப வில்லை என நான் ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணத்தின் மரபுரிமை களைப் பாதுகாக்க பௌத்த மதகுரு மார் அடங்கிய செயலணி உருவாக்கப்பட் டது, தமிழர்களுடைய வரலாறு, கலாசார அடையாளங்கள் என்பன அழிக்கப்பட்டு எதிர்காலத்தில் பௌத்த சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா என கேட்க விரும்புகிறேன்-என்றார்.

## விக்னேஸ்வரன்...

தலைமையில் கூடியது. சபாநாயகரின் அறிவிப்பு முடிவடைந்ததையோடு விக்னேஸ்வரன் விவகாரம் சபையில் பெரும் விவகாரமாகியது.

சஜித் அணி உறுப்பினரான மனுஷ நாணயக்கார ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி,

" சபாநாயகருக்கு நன்றி தெரிவிக்கும் உரையின்போது இலங்கையின் பூர்வீக மொழி பற்றியும் சுயநிர்ணய உரிமை சம்பந்தமாகவும் விக்கேஸ்வரன் வெளி யிட்ட கருத்துகளை ஹன்சாட்டில் இருந்து நீக்கக் கோரிருந்தேன். இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் அவரின் உரை ஹன்சாட்டில் உள்ளடக்கப்பட் டுள்ளது." என சுட்டிக்காட்டி சர்ச்சையை கிளப்பினார்.

"ஆளுங்கட்சியில் இருந்தாலும் எதிர்க் கட்சியில் இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது கருத்தை வெளியிடும் சுதந்திரம் இருக்கின்றது " என சபாநாயகர் சுட்டிக்காட்டியபோது,

ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் சாந்த பண்டார,

"நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து அர சமைப்பைமீறும் விதத்தில் இருந்தால் அது ஹன்சாட்டில் இருந்து இதற்கு முன்னரும் நீக்கப்பட்டுள்ளது. எனவே, இவரின் உரை யில் உள்ள சர்ச்சைக்குரிய கருத்துகளும் நீக்கப்படவேண்டும்" - என வலியுறுத்தினார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட நளின் பண்டார எம்.பி.,

"பயங்கரவாதத்தை, தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் நேரடி யாகவும், மறைமுகமாகவும் ஈடுபடமாட் டோம் எனச் சபையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளோம். இவ்வாறு சத்தியப்பிர மாணம் செய்து ஒரு மணிநேரத்துக்குள் ளேயே அதனை மீறும் வகையில் விக் னேஸ்வரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரின் உரை இனவாதம் கொண் டது. சபையில் செய்த சத்தியப்பிரமா ணத்தைமீறும் வகையில் உள்ளது. எனவே, அவரை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றவேண்டும்-என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"மீண்டும் இந்த நாட்டில் சமாதானத்தை சீர்குலைக்கும் வகையில் நாடாளுமன்றில் கருத்துக்கள் வெளியிட்டால் அல்லது தமிழ் மக்கள் மத்தியில் கோபத்தை ஏற் படுத்தும் வகையில் பேசினால் சுயநிர்ண யத்திற்காக தமிழ் இளைஞர்களை மீண் டும் தூண்டும் வகையில் பேசினால் உண் மையிலேயே அதனை நிராகரிக்கவேண் டும். நாடாளுமன்றத்தின் முதல் அமர்விலேயே தமிழ்ப் பிரதிநிதி ஒருவர், தமிழ் மொழிதான் சுதேசவாசிகளின் மொழி என்று கூறியிருந்தார்.

அதனை நிர்ணயிப்பது இதுபோன்ற சபையல்ல. எனினும் எமது நாட்டைப்

## ஒரே நாடு ஒரே சட்டம்...

நான் நாடாளுமன்றத்தில் சிங்களத் தில் உரையாற்றுகின்றேன் என்பதற்காக என்னை விமர்சிக்கலாம். ஆனால் விமர்சிப்பவர்கள் விமர்சிக்கட்டும். விமர்சனங்களாலேயே நான் வளர்ச்சியடைகின்றேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கொள்கைப் பிரகடன உரையில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் மிருசுவில் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்தார். அதேபோன்று றோயல் பார்க் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய கொலைக் குற்றவாளியும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அப்படியாயின், 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையின்கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்பட வேண்டும். சிலர் எவ்வித குற்றச்சாட்டுக்களோ அல்லது விசாரணைகளோ இன்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படியெல்லாம், தமிழ் மக்களுக் காக நான் பேசுகின்றேன் என்பதற்காக என்னை இனவாதி என எண்ணிவிடவேண் டாம். நான் ஒன்றும் இனவாதியில்லை. நான் கண்டியில் கல்வி கற்றேன். எனக்கும் அதிகளவான சிங்கள நண்பர்கள் இருக்கின்றார்கள்.

இதேவேளை, இந்த நாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு வீழ்ச்சி என்று சொல்லப்படுகின்றது. ஆனால், எங்களுக்கு 10 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன.

உண்மையில் இந்த நாடாளுமன்றத் துக்கு நாம் வருவதற்கான நோக்கமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அடையவேண்டும் என்பதற்காகவே. எனவே, 10 உறுப்பினர்களாகவோ ஐந்து உறுப்பினர்களாகவோ இருந்தாலும் சரி எமக்கு அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவேண்டும்.

அந்தவகையில், சிலநேரம் இந்த அர சாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக் கினால் நாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவேண்டிய அவசியமே இருக்காது. மாகாண சபையின் ஊடாக எங்களது வேலைத் திட்டங்களை செய்யக்கூடியதாக இருக்கும்.

அந்தவகையில் அரசுக்கு ஆணித்தர மாக ஒரு கோரிக்கையை முன்வைக்கின் றேன். இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி இந்த நாட்டுக்கு ஒரு நிரந்தரமான தீர்வைத் தரவேண்டும்-என்றார்.

## மாகாணசபைத்...

அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் நோக் கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

## பாராளுமன்றம்...

மாவட்டத்தில் போட்டியிட்ட உதித்த லொக்கு பண்டார விருப்பு வாக்கு பட்டி யலில் ஏழாம் இடத்தில் இருக்கின்றார். எனினும், மொட்டு கட்சிக்கு 6 ஆசனங் களே கிடைக்கப் பெற்றன. எனவே, எம். பியொருவர் பதவி துறந்தால் பட்டியலில் அடுத்த இடத்தில் இருப்பவருக்கு சபைக்கு வருவதற்கான வாய்ப்பு கிட்டும்.

ஊவா உட்பட 9 மாகாணசபைகளுக் கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவ தற்கு திட்டமிட்டுள்ள அரசு அதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பற்றிய 2500 ஆண்டுகள் ஆவண வரலாற் றைக் கொண்டுள்ளதுடன், இங்குள்ள அனைத்துச் சம்பிரதாயங்களையும் சிங் களவர்களே இயற்றி வைத்தார்கள். இது நாடு முழுவதிலும் உள்ள தொல்பொருள் அடையாளங்களினால் உறுதிபடுகிறது. இந்த வரலாற்றைத் தெரிந்து கொண்டே வல்லிபுரம் சிதைவுகளைத் தெரிந்து கொண்டே பிழையானவற்றைக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

சுயநிர்ணயத்தைக் கோரி அவர் கருத்து முன்வைத்திருப்பதானது தாயுடன் சிறிய குழந்தை சந்தைக்குச் சென்று இனிப்பைக் கோருவதற்கு சமமாகும். 50 சதவீதத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் தென்னிலங்கையில் ஏனைய இனத்தவர்களுடன் வாழ்கின்றனர். ஆனால் மிகவும் பொறுப்புவாய்ந்த மதிப்பிற்குரிய அந்த உறுப்பினர், சிங்களவர்கள் வடக்கில் வாழமுடியாது என்று கூறியிருக்கின்றார்.

அவர் றோயல் கல்லூரியில் பயின்ற வர். சிங்களவர்களுடன் சட்டக்கல்லூ ரியில் பயின்றவர். 65 வருடகாலமாகச் சிங்கள சமூகத்துடன் வாழ்ந்தவர். இவர் தொடர்ச்சியாகச் சிங்கள மொழி, சிங்கள மக்கள் மீது அவதூறு செய்து வருகின்றார். பௌத்த மதத்திற்கு எதிராகவும், வடக்கில் புத்தர் சிலைகளை அகற்றும்படியும் கிளிநொச்சியில் போராட்டம் நடத்தியுள்ளார்.

அவர் வேறுயாருமல்ல, விக்னேஸ் வரன் தான். அவர் முள்ளிவாய்க்காலில்

## கூட்டமைப்புக்கு...

தெரிவித்தார்.

சுதுமலைப் பகுதியில் அவருக்கு நடந்த வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற்ற பாராளுமன்றத் தேர்த லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைச் சிதைக்கப் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தேர்தல் காலத் திலேயே நாங்கள் கூறியிருந்தோம். ஆயி னும் அதனை எமது மக்கள் முழுமையாகக் கேட்கவில்லை. அதனால் எமக்குச் சிறிய பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் தேர்தல் முடிவின் பின்னர் கூட்டமைப்பின் பலத்தைக் குறைப்பதற் காக தாம் தந்திரோபாயம் வகுத்துச் செயற்பட்டதாக அரச தரப்பினரே தற்போது கூறுகின்றனர். உண்மையில் அவர்களது தந்திரோபாயம் என்ன என்பதை நாங்கள் அறியாமல் இல்லை. அதனை முழுமையாக அறிந்து தான் மக்களுக்குச் சொல்லியிருந்தோம்.

அவ்வாறு நாங்கள் சொல்லி வந்த போதிலும் மக்கள் அதனைக் கேட்க வில்லை. தற்போது கூட்டமைப்புக்கு சிறு பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்திருக்கின்றனர். ஆனால் அதற்கு அப்பால் சென்று வாக்களித்தும் உள்ளனர்.

இந்த அரசு கட்டாயம் வருமென்றே பலரும் கருதியிருந்தனர். அதனால் தமி ழர் தரப்பு பலமாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்தியிருந்தோம். ஆயினும் தமிழர் தரப்பின் ஒட்டுமொத்த ஆதரவும் கூட்டமைப்புக்கு கிடைக்கவில்லை. இருந்தும் மக்கள் எங்களுக்குக் கணிசமான ஆதரவை இந்தத் தேர்தலிலும் வழங்கியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட் பட தமிழ்த் தேசியம் சார்ந்த விக்கினேஸ் வரன், கஜேந்திரகுமார் ஆகிய தரப்பு களுக்கும் மக்கள் வாக்களித்திருந்தாலும் அதற்கு அப்பால் சென்றும் வேறு கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்திருக் கின்றனர்.

அபிவிருத்திக்காகத் தான் அவர் களுக்கு மக்கள் வாக்களித்தார்கள் என் றால் கடந்த ஆட்சியில் நாங்கள் பல அபிவிருத்திகளை முன்னெடுத்திருந் தோம். ஆனால் எதிர்கால அபிவிருத்திக் காக இந்தத் தரப்பினர்களுக்கு வாக்களித்தார்களோ தெரியவில்லை.

ஆகவே இந்தத் தேர்தலில் எமக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவில் இருந்து நாங்கள் மீண்டு வர வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு என்பது தற் காலிகமானதுதான். ஆகையினால் தமிழ் மக்களின் பலமான அமைப்பாக இருக் கின்ற கூட்டமைப்புக்கு மக்கள் தொடர்ந் தும் ஆதரவை வழங்குவதனூடாக நாங்கள் முன்னோக்கிச் செல்ல முடியும். - என்றார்.

பதவிப்பிரமாணம் செய்கின்றார். முள்ளி வாய்க்கால் என்பது ஈழத்துக்கான போர் நிறைவுற்ற இடம். அங்கு பல ஆயுத மேந்தியவர்கள் கொல்லப்பட்டனர். அங்கு சென்று உத்தியோகபூர்வமற்ற பதவிப்பிரமாணம் செய்பவராயின் பிரிவினைவாத சக்திகளின் தூண்டு தல்கள் ஏற்பட்டுள்ளன.

ஆகவே இது குறித்து அவரிடம் விசாரணை செய்ய வேண்டும். அவர் பேசிய கருத்துக்களும் ஹன்சாட்டி லிருந்து நீக்கப்படல்வேண்டும்.

இலங்கைப் படையினர் இனப்படு கொலை செய்தார்கள் என்றும், போர் குற்றம் செய்தார்கள் எனவும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார். கோட்டாபயவுக்கு யாழ்ப்பாணத்தில் வாக்குகள் கிடைக்காமைக்கான காரணமும் இனப்படுகொலை செய்தமையே என்றும் கூறியுள்ளார்.

கடந்த கால ஜனாதிபதி தேர்தலில், இனப்படுகொலை செய்தார்கள் எனக் கூறும் படைக்குத் தலைமை தாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அதிக மக்கள் வடக்கில் வாக்களித்தார் கள். ஆகவே கஜேந்திரகுமார் பொன்னம் பலத்தின் தர்க்கத்தை நிராகரிக்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் உயர்குலத்தினர் தாழ் குலத்தினருக்கு இரத்ததானம்கூட செய்யமாட்டார்கள். இப்படியிருக்க, சிங்களப் படையினர் அங்கு பலருக்கும் இரத்த தானம் செய்திருக்கின்றனர். ஆகவே இவர்களுக்கு தமிழ் மக்கள் பற்றி கருத்து கூற உரிமை கிடையாது. சிங்களப் படையினருக்கும் எமக்குமே அதற்கான உரிமை இருக்கிறது. காணாமல் போனோர் அலுவலகத்துக்கும் இம்முறை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயை தற்கொலைதாரி ஒருவரே கொலை செய்தார். அவரது ஆள் அடையாளம் இதுவரை உறுதியாகவில்லை. இந்நிலை யில் அவருக்கான நட்டஈட்டைக் கோரி னால் எப்படி வழங்குவது? சாலிய பீரிஸ் என்பவர் முன்னாள் வெளிவிவகார அமைச் சர் மங்கள சமரவீர போர்க் குற்றம் பற்றி கூறியபோது அதனை வரவேற்றவர்.

நிமல்கா பெர்னாண்டோவும் அதற் குச் சாதகமாக ஜெனீவாவில் கருத்துரைத் தவர். இப்படிப்பட்டவர்கள் அங்கம் வகிக்கின்ற காணாமல் போனார் அலுவல கத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித் தும் நாங்கள் ஆராய வேண்டும்-என்றார்.

## பேராசிரியர்...

வினால் சிரேஷ்ட பேராசிரியர் எஸ். சிறி சற்குணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட் டுள்ளார் என ஜனாதிபதியின் மேலதிக செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் துணைவேந்தர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங் களுக்குத் துணைவேந்தர்களை நியமிப் பதற்கான புதிய நடைமுறைகள் அடங் கிய சுற்றறிக்கை கடந்த மே மாத முற்பகுதி யில் வெளியிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காக மே 15 ஆம் திகதி பதிவாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் இருந்து - சுற்றறிக்கைக்கு அமைய இடம் பெற்ற மதிப்பீடுகளின்படி, கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற விசேட பேரவை அமர் வில் வைத்து திறமை அடிப்படையில் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, பேராசிரியர் கு. மிகுந்தன், பேராசிரியர் த. வேல்நம்பி ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டு, அவர்களின் விவரங்கள் ஜனாதிபதியின் தெரிவுக்காக அனுப்பப்பட்டிருந்தன.

பல்கலைக்கழகப் பேரவையின் பரிந் துரையின் அடிப்படையில், மூவரினது பெயர்களையும் கடந்த 13 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைத்திருந்தது.

பல்கலைக்கழக கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற் றின் பரிந்துரைகளுடன் கிடைத்த மூன்று பெயர்களில் இருந்து, பல்கலைக் கழகப் பேரவை மதிப்பீட்டின் படி முதல் நிலையைப் பெற்றிருந்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜாவை ஜனாதிபதி கோட்டாபய யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமித்திருக்கிறார்.

ஈழநாடு
Eelanadu
28.08.2020 வெள்ளிக்கிழமை

சார்வரி, ஆவணி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 492 7805**

# கூட்டமைப்பின் உண்மையான பலவீனம்?

தங்களது பின்னடைவுக்கு கட்சிக்குள் காணப்பட்ட உள் முரண்பாடுகளே காரணமென்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலய்னா, திருகோணமலையில் சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இன்று சம்பந்தன் கூறியிருப்பதை பலரும் சம்பந்தனுக்கு பல வருடமாக கூறி வந்திருக்கின்றனர். கூட்டமைப்பை மறுசீரமைக்குமாறும் வலியுறுத்தியிருந்தனர். ஆனால், சம்பந்தன் அவ்வாறான கோரிக்கைகள் எதனையும் பொருட்படுத்தவில்லை.

தங்களுக்குள் உள் முரண்பாடுகள் இருக்கின்றன என்று கூறும் சம்பந்தன், அதற்கான காரணங்களை கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் இதுவரையில் முன்னெடுக்கவில்லை. இப்போதும் கூட்டமைப்பின் பேச்சாளர் யார்? கூட்டமைப்பின் கொறடா யார்? என்னும் கேள்விகளுடன் பங்காளிக் கட்சிகள் மோதுகின்ற நிலைமைதானே காணப்படுகின்றது. ஏன் இந்த நிலைமை காணப்படுகின்றது?

கூட்டமைப்பின் பின்னடைவுகளுக்கு உள் முரண்பாடுகளையும் ஒரு காரணமாக சொல்ல முடியும்தான். ஆனால், அந்த முரண்பாடுகளின் வேர் எங்கிருக்கின்றது? தொடர்ந்தும் முரண்பாடுகளை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்ற அந்தக் காரணம் எது? கூட்டமைப்பின் பின்னடைவு என்பதை வெறுமனே தேர்தலுடன் மட்டும் குறுக்கக் கூடாது. அந்தத் தவறைத் தான் சம்பந்தனும் செய்து கொண்டிருக்கின்றார். கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகளும் மோசமாகத் தோல்வியடைந்திருக்கின்றன. அந்தத் தோல்வி எதனால் நிகழ்ந்தது? இதற்கான பதிலும் அந்த வேர்க் காரணத்தில்தான் தங்கியிருக்கின்றது.

உண்மையில், கூட்டமைப்பின் அனைத்து பின்னடைவுகளுக்கும் பின்னாலிருக்கின்ற காரணம் ஒன்றுதான். அதாவது, கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியல்ல. இதனால் அதற்கென்று தனியானதொரு கட்டமைப்பு இல்லை. விடுதலைப் புலிகளின் காலத்தில், விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளுதல் என்னும் ஓர் இலக்கின் அடிப்படையிலேயே கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. விடுதலைப்புலிகள்தான் எதிரும் புதிருமான இந்தக் கட்சிகளை தங்களது அரசியல் தேவைகளுக்காக ஒன்றுபடுத்தியிருந்தனர். விடுதலைப் புலிகள் இருக்கின்ற வரையில், விடுதலைப் புலிகளே இவர்களை வழிநடத்தியுமிருந்தனர். சம்பந்தனை அவர்களே நாடாளுமன்றக் குழுத் தலைவராகவும் நியமித்திருந்தனர். இதனை இப்போது சம்பந்தன் மறுக்கலாம். ஆனால், ஒரு வேளை விடுதலைப் புலிகள் சம்பந்தன் நாடாளுமன்ற குழுத் தலைவராக வருவதை விரும்பாதிருந்தால், அதனை தடுத்திருக்கலாமல்லவா. ஆவர்களை மீறி சம்பந்தனால் செயற்பட்டிருக்க முடியுமா? இதனை எவராலும் மறுக்க முடியுமா?

விடுதலைப் புலிகள் என்னும் அமைப்பை சுற்றிவட்டமிட்டுக் கொண்டிருந்தவர்கள் 2009இற்கு பின்னர் சுயாதீனமாக செயற்பட முயற்சித்த போதுதான் முரண்பாடுகள் வேர் கொண்டன. இதற்கு காரணம் இவர்களுக்கென்று எந்தவொரு கட்டமைப்போ, நிர்வாக ஒழுங்கோ இருந்திருக்கவில்லை. இதன் காரணமாக அடிக்கடி இவர்களின் உள் முரண்பாடுகள் சந்திக்கு வந்தன. இவற்றையும் தாண்டி, தமிழ் மக்கள் இவர்களை ஆதரித்திருந்தனர். இதனால் இவர்களால் தப்பிப்பிழைக்க முடிந்தது. கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் கடந்த தேர்தல்களில் வெற்றிபெற முடியாத போதும், ஒவ்வாரு வெளியேற்றமும் கூட்டமைப்பை பலவீனப்படுத்தியது. இதனை சம்பந்தன் சரியாக கணிக்கவில்லை; அல்லது, அவரால் கணிக்க முடிந்திருக்கவில்லை. சம்பந்தனை பொறுத்தவரையில் அவர் ஒரு பெரிய கட்சிக்கு தலைவராக இருந்த அனுபவமுள்ளவர் அல்லர். பலரும் உயிரோடில்லாத காரணத்தினால் இப்படியானதோர் இடத்திற்கு வந்தவர். அவரால் ஓர் அரசியல் ஸ்தாபனத்தை வழிநடத்த முடியவில்லை.

எனவே, கூட்டமைப்பை தூக்கி நிறுத்த வேண்டுமாயின் முதலில் அது ஓர் அரசியல் ஸ்தாபனமாக மாற வேண்டும். அதற்கு, முதலில் கூட்டமைப்பு ஒரு தெளிவான கட்சிக் கட்டமைப்பு, நிர்வாக ஒழுங்கின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில், அவ்வாறானதொரு பதிவுதான் அதிலுள்ள ஒவ்வொரு கட்சியையும் சமத்துவமாக நடத்தும். அந்த சமத்துவம்தான் கூட்டமைப்பிலுள்ள ஒவ்வொருவருக்கும் கடிவாளமிடும். உண்மையில், கூட்டமைப்புக்குள் அவ்வாறானதொரு கடிவாளமிடும் ஏற்பாடு இருந்திருந்தால், சுமந்திரனின் தன்னிச்சையான செயற்பாடுகள் இடம்பெற்றிருக்காதல்லவா!

# விக்கி உண்மைகளை உரைப்பதால் கூச்சலிடுகிறார்கள் பேரினவாதிகள்!

## முன்னாள் எம்.பி. சிவசக்தி ஆனந்தன் சுட்டிக்காட்டு

*வவுனியா, ஒக 28*

வரலாற்றை திரிவுபடுத்தி இலங்கையை சிங்கள, பௌத்த நாடாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பயணிக்கும் பேரினவாதிகள் விக்னேஸ்வரனின் கூற்றை ஜீரணிக்க முடியாது கூச்சலிட்டு வருகின்றனர் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

தேர்தல் நிறைவடைந்தவுடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று கோரி நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்று உண்மைக்கு எதிராக கோசங்கள் எழுந்தபோது மௌனித்து நிற்கின்றது.

9ஆவது பாராளுமன்றத்தின் ஆரம்ப நாளன்று சபாநாயகருக்கான கட்சித்தலைவர்கள் வாழ்த்துரையின்போது தமிழ் மக்கள் பூர்வீகக் குடிகள், தமிழ் மொழிதொன்மையானது என்ற உண்மையை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் விக்கினேஸ்வரன் பாராளுமன்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் தமிழர்கள் ஆதிக்குடிகள் என்பதற்கும் தமிழ் மொழி பழம்பெரும் மொழி என்பதற்கும் ஆயிரமாயிரம் சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால், அவற்றை மாகாவம்சம், சூலவம்சம் போன்ற வரலாற்று நூல்களை பயன்படுத்தி முழுமையாக திரிபுபடுத்தியுள்ளவர்கள் பேரினவாதச் சிங்களவர்களே. அதுமட்டுமன்றி தற்போதும் கூட, தமிழர்களின் பூர்வீகத்தாயகமான வடக்கு -கிழக்கின் வரலாற்றை மாற்றுவதற்கான திட்டமிடல்களே முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழர்களை வந்தேறு குடிகளாக சித்தரித்து இலங்கையை முழுமையான சிங்கள, பௌத்த நாடாக பிரகடனப்படுத்துவதே பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது. அதன் ஓர் அங்கமாகவே, கிழக்கு மாகாணத்திற்கான தொல்பொருள் ஜனாதிபதி செயலணி அதற்கு முழுமையான ஆதாரமாக அமைகின்றது.

இவ்வாறு தமிழினத்தின் அடையாளங்களை அழித்து, பூர்வீக நிலங்களை கையகப்படுத்தி பௌத்த, சிங்கள சித்தாந்தத்தினை நிறுவுவதற்கு விளைந்து வருகின்ற ஆட்சியாளர்களுக்கு தமிழர்களும், தமிழும் பூர்வீகமும், தொன்மையும் கொண்டது என்ற உண்மையைக் கூறுகின்றபோது அது கசக்கவே செய்யும். அதன் வெளிப்பாடாகவே தென்னிலங்கையில் விக்கினேஸ்வரனுக்கு எதிரான கூச்சல்கள் அதிகரித்துள்ளன.

கூச்சல்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும் அச்சப்பட்டு உண்மைகளை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கான பணியை விக்கினேஸ்வரன் தொடர்ந்தும் முன்னெடுப்பதில் பின்னடிப்புக்களைச் செய்யமாட்டார் என்பது உறுதியான விடயமாகும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்களே தொன்மைக் குடிகள்: ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு!

*யாழ்ப்பாணம், ஒக 28*

இலங்கைத் தீவில் தமிழர்களே ஆதிக்குடிகள் என்பதும் அவர்கள் தனியானதொரு தேசம் என்பதும் பேரினவாதிகளின் கூச்சல்களால் இல்லை என்றாகிவிடாது எனத் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

சிங்கள இலக்கியங்களும், பாளி இலக்கியங்களும் இலங்கையின் பூர்வீக மக்கள் சிங்கள மொழி பேசுகின்ற ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் வட இந்தியாவில் இருந்து வந்த ஆரிய இன மக்கள் என்றும் கூறுகின்றன. ஆனால், இவற்றுக்கு ஆதாரமாக எவ்விதத் தொல்லியல் சான்றுகளும் இலங்கையில் இருந்து கிடைக்கவில்லை.

இலங்கையின் பூர்வீக மக்கள் திரா விட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த, பெருங்கற் பண்பாட்டுக்குரிய மக்கள் இனம் என்பது வரலாற்றாசிரியர்களாலும், தொல்லியலாளர்களாலும், மொழியியலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தென்னிந்தியாவின் நிலப்பரப்பில் இருந்து இயற்கைப் பேரிடர் காரணமாகப் பிரிந்த ஒரு நிலப்பரப்பே இலங்கைத் தீவு என்று புவியியலாளர்கள் நிரூபித்திருக்கும் நிலையில், இலங்கையின் பூர்வீக மக்கள் தமிழ் மொழி பேசுகின்ற திராவிடப் பண்பாட்டு மக்கள் என்பதை வரலாற்று அறிவில்லாத சாதாரண மக்களே ஏற்றுக்கொள்வார்கள்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் எத்தகைய கொடும் நெருக்கடிகளைக் கொடுத்தாலும் தமிழர்களே தொன்மைக் குடிகள் என்பதும், தமிழர்கள் தனியானதொரு தேசம் என்பதும் ஒருபோதுமே இல்லை என்றாகிவிடாது- என்றுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# ஒற்றையாட்சியை வலுப்படுத்தி புதிய அரசமைப்பை உருவாக்குக

## அரசிடம் எல்லே குணவங்ச தேரர் பகிரங்க வேண்டுகோள்



**கொழும்பு, ஒக.28**

**“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு ஒற்றையாட்சி முறைமையை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.”**

**- இவ்வாறு எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.**

**கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இன்று பல சர்வதேச அமைப்புகள் நாட்டுக்குள் வந்துள்ளன. எனவே, சர்வதேச பிரச்னைகளிலிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் மகாநாயக்க தேரர்களும் அதற்கும் பக்கபலமாக இருப்பார்கள்.

நாட்டுக்குப் புதியதொரு அரசமைப்பே தேவைப்படுகின்றது. நடைமுறையிலுள்ள அரசமைப்பில் சில சரத்துகளை இல்லாது செய்து புதிய சரத்துகளை உள்வாங்கும் பணியை முன்னெடுத்து முழுமையானதொரு மறுசீரமைப்பை மேற்கொண்டு புதிய அரசமைப்பை இயற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசமைப்பின் 13, 15, 16, 17, 18 மற்றும் 19ஆவது திருத்தச் சட்டங்கள் கட்டாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில் ஒற்றையாட்சி என்ற பதத்தை அரசமைப்பில் உள்வாங்குவதற்கு நானே நடவடிக்கை எடுத்தேன். அது மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, மரமொன்றின் கிளைகளைப் பாதுகாப்பதற்கு முதல் ஆணி வேரைப் பாதுகாக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் ஒற்றையாட்சி முறைமை பலப்படுத்தப்பட வேண்டும்.

கடந்த நான்கரை வருடங்களில் நாட்டின் இதிகாசம், கலாசாரம், தேசிய வளங்கள் என்பன சீரழிக்கப்பட்டன. துறைமுகம் உள்ளிட்ட இடங்கள் விற்பனை செய்யப்பட்டன. நாட்டை 9 கூறுகளாகப் பிரிக்கும் விதத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டது. தேசிய கீதத்தை மாற்றுவதற்கு முயற்சித்தனர். பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்ற விடயத்திலும் கைவைத்தனர். எனினும், மக்கள் இதனைத் தடுத்து நிறுத்தினர் - என்றார்.



# மாதுரு ஓயாவில் வெள்ளை யானை!

கொழும்பு, ஒக 28

மாதுருஓயா தேசிய பூங்காவில் வெள்ளை யானை ஒன்று சுற்றித் திரிவதாக பூங்கா மேலாளர் புத்திக விதாரண தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலனறுவை வனவிலங்கு திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ. எம்.கே.எஸ் சந்திரரத்ன தெரிவிக்கையில்-

இதுபோன்ற காட்டு யானை பற்றிய தகவல் எங்களுக்குக் கிடைத்துள்ளது. நேற்று முன்தினம் பூங்காவின் அதிகாரி ஒருவர் மதுருஓயா ஏரியின் மேற்பரப்பில் ஒரு வெள்ளை யானையை கண்டார்.

இருப்பினும், இது குறித்து விரிவான அவதானிப்பு இல்லாமல் விரிவாக கருத்து தெரிவிக்க முடியாது என்று கூறினார்.

மரபணு மாற்றங்கள் அத்தகைய யானைகளுக்கு காரணமாக இருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அத்துடன், பூங்காவில் உள்ள யானை வெள்ளை யானைதானா அல்லது சில வெளிப்புறப் பொருள்களைப் பயன்படுத்துவதால் நிறத்தில் மாற்றம் ஏற்பட்டதா என்பதை உறுதியாகக் கூற முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற மதிய உணவால் கொதிப்படைந்தனர் எம்.பிக்கள்

கொழும்பு, ஒக 28

புதிதாக தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையின் போது, நாடாளுமன்றச் சிற்றுண்டிச்சாலையில் வழங்கப்படும் உணவு தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் வழங்கப்படும் வரப்பிரசாதங்கள் பற்றி, நாடாளுமன்ற அதிகாரியொருவர் உரையாற்றிய போது, நாடாளுமன்றச் சிற்றுண்டிச்சாலையில் 3,000 ரூபா பெறுமதியான மதிய உணவு வெறும் 200 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றது என தெரிவித்தார்.

இதையடுத்து கருத்துத் தெரிவித்த பல உறுப்பினர்கள், அந்த உணவை தாம் அருந்தினர் எனவும், அதை 3,000 ரூபா பெறுமதியானதென யார் வரையறுத்தார்கள் எனவும் சூடாகக் கேள்வி யெழுப்பினர்.

இந்த உணவை விரும்பவில்லை. வீட்டிலிருந்தே உணவைக் கொண்டு வருகிறேன் என உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# பட்டதாரிகள் நியமனம் குறித்து விண்ணப்பதாரிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக 28

ஒரே திகதியில் பட்டக் கல்வியைப் பூர்த்தி செய்த அனைவரும் ஒரே மாதிரியான ஆவணங்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தபோதும் குறிப்பிட்ட சிலரின் விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் பட்டதாரிகள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

50ஆயிரம் பட்டதாரி நியமனங்களுக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரே திகதியில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த அனைவரும் ஒரே மாதிரியான ஆவணங்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தபோதும் குறிப்பிட்ட சிலரின் விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஒரு தொகுதியினரின் விண்ணப்பங்கள் மாத்திரம் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளதாக பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் 11. 07.2019 அன்று பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு 6 மாத காலத்துக்கு மேலாக விடுகைப் பத்திரம் வழங்கப்படாமல் இருந்தது. இதன் காரணமாக ஐம்பதாயிரம் பட்டதாரி நியமனங்களுக்காக விண்ணப்பிக்கும்போது மேற்குறித்த திகதியில் பட்டக் கல்வியைப் பூர்த்தி செய்த அனைத்து மாணவர்களும் பீடாதிபதியின் கையொப்பம் அடங்கிய கடிதத்துடன் பரீட்சைப் பெறுபேறுகளையும் இணைத்து சமர்ப்பித்திருந்தனர்.

அதில் பெரும்பாலானவர்கள் வேலைவாய்ப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ள போதும், குறிப்பிடப்பட்ட சிலருக்கு மாத்திரம் விடுகைப் பத்திரம் இணைக்கப்படாமல் பீடாதிபதியின் கடிதத்துடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் அந்த விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

ஒரே திகதியில் பட்டக் கல்வியைப் பூர்த்தி செய்த அனைவரும் ஒரே மாதிரியான ஆவணங்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தபோதும் குறிப்பிட்ட சிலரின் விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், அவர்களில் ஒரு தொகுதியினரின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தங்களுக்கு இழைக்கப்பட்ட உரிமை மீறலாக கருதுவதாக விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ள மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# புலி ஆதரவாளர்கள் இருவருக்கு ஆதரவளித்தார் மங்கள சமரவீர

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் இராணுவ அதிகாரி சாட்சியம்

கொழும்பு,ஒக 28

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிர ஆதரவாளர்களாக செயற்பட்டதால் கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த இருவரை, அதிலிருந்து நீக்குவதற்கு 2015 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராகச் செயற்பட்ட மங்கள சமரவீர தனக்கு அழுத்தம் கொடுத்தார் என கிரித்தல இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாக செயற்பட்ட லெப்டினன்ட் கேணல் ஷம்மி குமாரரத்ன வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தபோது அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த இம் மானுவேல் அடிகளார் மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவளித்தவர்கள் என அடையாளம் காணப்பட்டிருந்ததாகவும், அவர்கள் இருவரும் தமது நண்பர்கள் எனவும், தாம் பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்ட காலப்பகுதியில் அவர்களுடன் நல்லுறவைப் பேணி இருந்தார் என்றும், மங்கள சமரவீர தன்னிடம் கூறினார் என ஷம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.

# திருட்டுகளுடன் தொடர்புடைய 4 பேர் கைது

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களைத் திருடி விற்பனை செய்து வந்த நால்வர் கம்பஹா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் திருடிய 13 மோட்டார் சைக்கிள்கள், 3 ஓட்டோக்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மாணவர்களின் சீருடை வவுச்சர் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு,ஒக 28

சகல அரச பாடசாலைகளிலும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைக்கான வவுச்சர்கள் செல்லுப்படியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைக்கான வவுச்சர்கள் செல்லுபடியாகும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வழங்கப்பட்ட வவுச்சர்கள் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்று காரணத்தால் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வவுச்சர்கள் செல்லுப்படியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ள தாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

செய்திகள்

# மனித உரிமை குறித்து மேற்குலகின் குற்றச்சாட்டுக்கள் நியாயமற்றவை!

## வெளிவிவகார செயலர் கொலம்பகே சொல்கிறார்



கொழும்பு,ஓக.28

**மேற்குலகிடமிருந்து வரும் மனித உரிமை குற்றச்சாட்டுகள் முற்றுமுழுதாக நியாயப்படுத்த முடியாதவை என இலங்கையின் வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே குறிப்பிட்டுள்ளார்.**

இந்தக் குற்றச்சாட்டுகள் நல்லிணக்கத்துக்கு உதவப் போவதில்லை என நாங்கள் நம்புகின்றோம். இது எங்களைப் பிளவுபடுத்தும் முயற்சி என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் எங்களுக்கு எதிராக எவரும் வாளை வைத்திருப்பதை விரும்பவில்லை. பலவந்தமாக நல்லிணக்கத்தை அடைய முடியாது என நாங்கள் கருதுகின்றோம்.

அது சமூகத்திலிருந்து உருவாகவேண்டும். மனித உரிமை குற்றச்சாட்டுகளுக்கு எதிராக எங்களை நியாயப் படுத்துவது எங்கள் இலக்கு இல்லை.

எம்.சி.சி உடன்படிக்கை குறித்து அமைச்சரவை ஆராயும். எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பான மீளாய்வுக் குழு சமர்ப்பித்த அறிக்கை புதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

மீளாய்வுக் குழு தேசிய பாதுகாப்பு குறித்த பல விடயங்கள் குறித்து கேள்வி எழுப்பியுள்ளது. இந்த கேள்விகளுக்கு விடைகளை காண வேண்டும்.

மீளாய்வுக் குழுவின் அறிக்கை புதிய அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். அமைச்சரவையில் உள்ள ஒவ்வொரு அமைச்சரினதும் கருத்துக்கள் பெறப்படும். அது முடிவடைந்ததும் மீளாய்வு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

நாடாளுமன்றம் இணக்கப்பாட்டைக் காண்பது குறித்து விவாதிக்கும். அது என்ன இணக்கப்பாடு என்பது எங்களுக்கு தெரியாது - என்றார்.



# பெருந்தோட்ட உதவி ஆசிரியர்கள் நுவரெலியாவில் நேற்று போராட்டம்

கொழும்பு, ஓக 28

பெருந்தோட்ட உதவி ஆசிரியர்களாக 2015 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற சுமார் 600 ஆசிரியர்கள் தமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தி நேற்று நுவரெலியாவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2015 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஆசிரிய உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் மேற்படிப்பை பூர்த்தி செய்தவுடன் இவர்களை ஆசிரியர்களாக உள்வாங்குவது என தீர்மானிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவர்கள் கொட்டகலை யதன்சைட் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய கல்லூரிகளில் தங்கள் பயிற்சிகளை 2018ஆம் ஆண்டு நிறைவு செய்து கொண்டனர்.

அப்படி நிறைவு செய்த பலரும் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டு அவர்களின் நிலுவையும் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான நிரந்தர நியமனமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், நுவரெலியாவில் இருக்கின்ற 600 ஆசிரிய உதவியாளர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருந்து வருகின்றனர்.

இவர்களுக்கு வெறுமனே மாதாந்தம் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு மாத்திரமே வழங்கப்படுகின்றது.

இவர்கள் தங்களையும் ஆசிரியர்களாக உள்வாங்கி தமது நிலுவைத் தொகையையும் நிரந்தர நியமனத்தையும் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கையில்-

எங்களின் இந்த போராட்டம் வெற்றி அடையாத சந்தர்ப்பத்தில் தாங்கள் எதிர்வரும் காலத்தில் மத்திய மாகாண கல்விச் செயலாளரின் காரியாலயத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்- என்றனர்.




# கருவை அழைக்கிறார் சஜித்

கொழும்பு, ஓக 28

எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து முன்னெடுக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினர், கரு ஜயசூரியவுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையிலேயே, சபாநாயகர் கரு ஜயசூரிய எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து முன்னெடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

# தனிமைப்படுத்தல் முடிந்து 60 பேர் நேற்று விடுவிப்பு

கிளிநொச்சி, ஓக 28

கிளிநொச்சி முழங்காவில் 651 படையணியின் பயிற்சி முகாமில் அமைந்துள்ள கொரோனா கண்காணிப்பு நிலையத்திலிருந்து நேற்று 60பேர் வெளியேறினர்.

டுபாய் உள்ளிட்ட அரபு நாடுகளில் இருந்து கடந்த 2ஆம் திகதி நாடு திரும்பிய 60பேர் இந்த முகாமில் தங்க வைக்கப்பட்டு கண்காணிக்கப் பட்டு வந்தனர்.

இவர்கள் 14 நாட்களை நிறைவு செய்துள்ள நிலையில் பி.சி.ஆர் பரிசோதனை முடிந்து கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவர்கள் நேற்றுச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ்களை கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் கே.என்.எஸ். கொதுவெகொட வழங்கினார்.

# மாத்தளை மேயர் பதவியில் நீடிப்பதற்கு தற்காலிக தடை

கொழும்பு,ஓக 28

மாத்தளை மேயர் பதவியில் டல்ஜித் அலுவிகார நீடிப்பதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநரால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான வர்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாத்தளை மேயரின் செயற்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளுக்காகக் குழுவொன்றும் நியமிக்கப் பட்டுள்ளது.

மூன்று மாத காலப் பகுதிக்குள் இந்த விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தனிமைப்படுத்தல் காலம் முடித்து வீடு திரும்பிய கர்ப்பிணிக்கு தொற்று



கொழும்பு,ஓக 28

14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்ட பின்னர் வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இந்தப் பெண் சிலாபம் - ஆராய்ச்சிக்கட்டுப் பகுதியைச் சேர்ந்தவர் என சிலாபம் பொது மருத்துவமனைப் பணிப்பாளர் டாக்டர் கபில மல்லவராச்சி தெரிவித்தார்.

வீட்டில் தனிமைப்படுத்தப் பட்ட பின்னர் மருத்துவ மனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

டுபாயில் இருந்து நாடு திரும்பிய இந்தப் பெண் வவுனியா தனிமைப்படுத்தல் மையத்தில் வைத்துக் கண்காணிக்கப்பட்ட பின்னர் வீட்டில் தனிமையில் இருந்து வந்தார்.

பாதிக்கப்பட்ட பெண் இப்போது ஐ.டி.எச். வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ள தாக டாக்டர் மல்லவராச்சி மேலும் குறிப்பிட்டார்.

# கோப் குழு உறுப்பினர்களை விசாரிக்க சபாநாயகரின் அனுமதி கட்டாயமானது

## சபையில் மஹிந்த யாப்பா அறிவிப்பு

தமது அனுமதியின்றி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு கோப் குழுவின் தலைவரை அல்லது உறுப்பினர்களை அழைக்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தின் விசேட அனுமதியின்றி, கோப் குழுவில் இடம்பெற்ற விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எவரையும் அழைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க இதன் போது சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழுவினால் கோப் குழுவின் முன்னாள் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி அழைக்கப்பட்டமை தொடர்பில் சபாநாயகரின் நிலைப்பாடு என்னவென்பது தொடர்பிலும் இதன்போது அவர் கேள்வியெழுப்பினார்.

அவ்வாறான அறிவித்தல் ஏதும் இதுவரை வெளியிட்டப்படவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறித்து சுனில் ஹந்துநெத்தி சபாநாயகருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ள விடயம் தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க இதன் போது சுட்டிக்காட்டினார்.

அதற்கு எழுத்துமூலம் பதிலளிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது கூறியுள்ளார்.

# கால இழுத்தடிப்புகள் மூலம் தமிழரின் அபிலாஷைகள் நீர்த்துப்போகமாட்டா!

## சபையில் கஜேந்திரன் கன்னியுரை



கொழும்பு,ஒக 28

தொடர்ச்சியான கால இழுத்தடிப்புக்கள் மூலம் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நீர்த்துப் போகச்செய்ய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சபையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எமது மக்களின் அபிவிருத்தியும்,அரசியல் தீர்வும் பொறுப்புக்கூறலும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை என்ற நிலை யில் அபிவிருத்தியை மட்டும் காட்டி மற்றவையை மழுங்கடிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று ஆற்றிய தனது கன்னி உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தின்போது உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு பகுதிகளை வரலாற்று ரீதியான தாயகமாகக் கொண்டு தனக்கென தனித்துவமாக மொழி, கலை, கலாசாரப் பண்புகளைப் பேணுகின்ற தேசிய இனத்தின் பிரதிநிதிகளாக தமிழ் தேச இறைமை மற்றும் சுயநிர்ணய அடிப்படையில் நாம் ஓர் அரசியல் தீர்வை பெற்றுத்தருவோம் என்று நாம் முன்வைத்த கொள்கைகளை ஏற்ற எமது மக்கள் எமக்களித்த ஆணையின் பிரகாரம் அவர்களின் குரலாக இந்த அவையில் நாம் பிரசன்னமாகியிருக்கின்றோம்.

தொடர்ச்சியான போரின் காரணமாக இன அழிப்பின் ஒடுக்குமுறைகளாலும் வடுக்களைச் சுமந்து நிற்கின்ற மக்களாகிய நாங்கள் மிகுந்த வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையுடனும் எமது குரல்களை வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

உண்மையில் இருந்தே நேர்மையான சமாதானம் பிறக்கும். எந்தவொரு பிரச்னையையும் தீர்க்கவேண்டுமெனில் இங்குள்ள அனைவரும் பிரச்னை இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதிலிருந்தே பிரச்னையின் தீர்வுக்கான ஆரம்பப் படிகள் ஆரம்பமாகின்றன.

மாறாக, பிரச்னையின் மூலத்தையும் பிரச்னையால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் அதற்கான நீதியான தீர்வு எது என்பவற்றையும் மறைத்து, மறந்து வெறுமனே மேம்போக்கான நிலையில் பிரச்னையை அணுகுவது ஒருபொழுதும் பிரச்னைக்கான தீர்வினைக் கொண்டுவரப்போவதில்லை.

இதற்கு அப்பால் தார்மீக ரீதியிலும் சரி, தந்திரோபாய ரீதியிலும் சரி அது தவறான செயற்பாடாகும். அதனடிப்படையில் இலங்கைத் தீவில் தமிழர்களின் இருப்பை -அடையாளத்தை கேள்விக்கு உள்ளாக்குகின்ற இந்த இனப் பிரச்னையின் மூலத்தையும் அதன் விளைவாக தமிழர்கள் மேல் இழைக்கப்பட்ட இனப் படுகொலைக்கான நீதி வழங்கலையும் ஏற்பதன் மூலமே இந்த நாட்டில் நிரந்தரமானதும் கௌரவமானதுமான சமாதானத்தை நாம் அடைய முடியும்.

அப்படியான ஒரு சமாதானம் இந்த தீவில் அனைவரையும் கௌரவமான சம உரித்துடையவர்களாக அவர்களது அடையாளங்களுடன் வாழ்வதற்கு வழிவகுக்கும்.

எவரையும் இரண்டாம் தரப் பிரஜைகளாக கணிக்கும் ஒரு பிற்போக்குத் தனமான பழமைவாதத்தை விடுத்து, நவீன அரசியல் உலகில் சிவில் பண்பாடுகளின் உச்சமாக விளங்குகின்ற நாடுகளின் முற்போக்கான அரசியல் அமைப்புக்களை முன்னுதாரணமாக் கொண்ட ஓர் அரசியல் தீர்வொன்றின் மூலமாக அத்தகைய உன்னதமான ஓர் எதிர் காலத்தை நாம் அடைய முடியும்.

இலங்கைத் தீவில் வடக்கு - கிழக்கை வரலாற்றுத் தாயகமாகக் கொண்டதனித்துவமான ஒரு மொழி கலை, கலாசாரப் பண்புகளைக் கொண்ட ஒரு தனித்துவமான இறைமை கொண்ட தேசமாக தமிழர்கள் ஒற்றுமை உணர்வுடனும் கௌரவத்துடனும் இந்த நாட்டினுள் வாழும் விருப்பை மீண்டும் மீண்டும் தமது ஜன நாயக ஆணையின் மூலம் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள்.

செயல்கள் எவ்வாறாக இருப்பினும், அப்படியான ஒரு மக்கள் ஆணையின் மீதே வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெரும்பாலான உறுப்பினர்கள் இங்கு வந்திருக்கின்றார்கள்.

அவர்கள் எந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமிழர்களுடைய உரிமைகளைப் பெற்றுத்தருவோம் என்றுகூறி தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தருவோம், தமிழர் தேசம் தலைநிமிர உழைப்போம் என்று கூறித்தான் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தச் சபைக்கு வந்திருக்கின்றார்கள்.

ஆகவே, சிங்கள தேசம் உங்களுடைய அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஆணை எவ்வாறானதோ, அதேபோன்று வடக்கு-கிழக்கிலே தமிழர்கள் தனித்துவமான இறைமை கொண்ட தேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று தான் இந்த ஆணையை வழங்கியிருக்கின்றார்கள்.

அந்த ஆணைக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஒரு குரலாகத்தான் நாங்கள் இங்கே வந்திருக்கின்றோம் என்பதனை உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றோம். ஜனநாயகத்தின் மிக உயர் சபையான இந்த நாடாளுமன்று எமது மக்களின் ஜனநாயக ஆணைக்கான மதிப்பை வழங்க வேண்டுமென எதிர் பார்க்கின்றோம்.

தொடர்ச்சியான பொருளாதாரத்தடை, எமது தேசத்தின் மீதான யுத்தம், அடக்குமுறை காரணமாக ஒடுக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் முற்றாக அழிந்திருக்கின்றது. அது மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில் இங்கிருக்கின்ற யாரும் கரிசனைகொண்டு கருத்துக்களை முன்வைத்திருக்காமை என்பது கவலைக்குரிய விடயம்.

அதேவேளையிலே, இந்தப் பகுதிகள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கும் என நான் நினைக்கவில்லை. எமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியும் திட்டமிடலும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாறாக அந்த மக்கள் மீது மேலிருந்து கீழாக திணிக்கப்படுவதாக அது இருக்கக்கூடாது. அந்த மக்களிடம் இருந்து எழுகின்ற எதிர்பார்ப்புக்களின் அடிப்படையிலேதான் அந்த அபிவிருத்தி என்பது மேற் கொள்ளப்பட வேண்டும். அதுவே உண்மையான அபிவிருத்தியாக அமையும்.

எமது மக்களின் அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் பொறுப்புக் கூறலும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. எனினும், ஒன்றை மற்றொன்று பிரதியீடு செய்ய முடியாது.

தொடர்ச்சியான கால இழுத்தடிப்புக்கள் மூலம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நீர்த்துப் போகச்செய்ய முடியாது என்பதனை எமது மக்கள் அவ்வப்போது நிரூபித்து வந்துள்ளார்கள் - என்றார்.

# பாடசாலைகளில் விளையாட்டு போட்டிகளை நடத்த அனுமதி

கொழும்பு, ஒக 28

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தடைப்பட்டிருந்த பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை மீண்டும் ஆரம்பிக்க விளையாட்டு மற்றும் சுகாதார அமைச்சுக்கள் அனுமதி வழங்கியுள்ளன.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

சுகாதாரத் தரப்பினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாகப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை மீண்டும் ஆரம்பிக்க இரண்டு அமைச்சுக்களும் இணக்கம் தெரிவித்துள்ளன.

# 25 வழக்குகள் நிலுவையில் உள்ள குற்றவாளி சிக்கினார்

கொழும்பு, ஒக 28

வீரகெட்டிய, ஹின்பொத்த பகுதியில் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது ரி 56 ரக துப்பாக்கி ஒன்றும், 30 தோட்டாக்கள் அடங்கிய துப்பாக்கியும் மற்றும் 1 கிராம் 610 மில்லி கிராம் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தங்காலை குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் 34 வயதான ஹின்பொத்த பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவருக்கு எதிராக வீடுகளைக் கொள்ளையடித்தமை தொடர்பில் 25 வழக்குகள் நிலுவையில் உள்ளதுடன், 11 பிடியாணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

# 186 பேர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஒக 28

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக மாலைதீவு மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து 186 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

இதற்கமைய, அவுஸ்திரேலியாவில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் - 609 எனும் விமானம் ஊடாக 160 இலங்கையர்கள் நேற்று பிற்பகல் 2 மணியளவில் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோன்று, மாலைதீவின் மலே விமான நிலையத்தில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல்- 102 எனும் விமானம் ஊடாக 26 இலங்கையர்கள் நேற்று முற்பகல் 11 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்தவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# சுகாதார பாதுகாப்பு முறைகளை மக்கள் பின்பற்றுவது கட்டாயம்

## இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, ஒக 28

நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் சிகிச்சை பெற்று வருவதால் பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் சில இடங்களில் சிலர் தற்போது முகக் கவசங்களை அணிவதில்லை. இலங்கைக்குள் கொவிட் 19 அச்சுறுத்தல் இல்லை என கருதுவதே இதற்கான காரணம் என நான் நினைக்கின்றேன்.

சமூகத்தில் தொற்றாளர்கள் இல்லாவிடினும் வைத்தியசாலைகளிலும், தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் தொற்றாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். ஆகவே, இது குறித்து சமூகப் பொறுப்புடன் அனைவரும் செயற்படவேண்டும்.

ஆகவே, சுகாதார அமைச்சு வழங்கியுள்ள சுகாதார அறிவுறுத்தல்களை முழுமையாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்

# விவசாய விற்பனை நிலையத்தில் திருட்டு

## பொலிஸார் விசாரணை

கிளிநொச்சி ஒக 28

கிளிநொச்சி - முழங்காவில் சந்தியில் அமைக்கப்பட்ட விவசாய விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்த வர்த்தக நிலையத்தில் 60 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மதிக்கக்கூடிய விதை தானியங்கள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளரால் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெறுகின்றமை தொடர்பில் சந்தேகித்த ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் அந்தக் கும்பலைப் பிடிக்க முற்பட்டுள்ளனர்.

எனினும் அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ள நிலையில் கடை உரிமையாளருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

முழங்காவில் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

செய்திகள்

# அரசைப் பாதுகாக்கவே முற்படுகிறது சர்வதேசம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றச்சாட்டு



கிளிநொச்சி,ஓக. 28

**இலங்கை அரசுக்குக் கால நீடிப்பை வழங்கி அரசைப் பாதுகாக்கவே சர்வதேசம் முற்பட்டுள்ளது என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத் தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார்.**

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் தொடர்பாக சர்வதேசம் நீதி பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையிலேயே தாங்கள் போராட்டம் நடத்தி வந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 30ஆம் திகதி சர்வதேச காணமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. நாங்கள் 11 ஆண்டுகளாக இந்த தினத்தில் வடக்கு-கிழக்கில் உறவுகளைத் திரட்டி பேரணியாக நீதி கேட்டு நிற்கின்றோம்.

எங்களால் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு, வீடுகளுக்குள் புகுந்து இழுத்துச்செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை 11 ஆண்டுகள் கடந்தும் நாங்கள் தெருவில் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

இலங்கை அரசிடம் நீதி பெற முடியாத நிலையில் சர்வதேசத்தின் வாசலில் நீதி கேட்டு நிற்கின்றோம்.

ஐ.நா.வின் 36ஆவது கூட்டத்தொடரிலிருந்து இற்றைவரை நீதி கேட்டு நின்றபொழுது சர்வதேசமும் கால இழுத்தடிப்பைச் செய்து இலங்கை அரசைக் காப்பாற்றியதே தவிர எங்களுக்கான நீதியைப் பெற்றுத்தரவில்லை. இந்நிலையில், இந்த ஆண்டிலாவது சர்வதேசம் எங்களுக்கான நீதியைப் பெற்றுத்தரவேண்டும் - என்றார்.

# ஜனாதிபதி ஆணைக்குழு பிள்ளையானுக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 28

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு பிள்ளையான் உட்பட 9 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான், சுனில் ஹந்துநெத்தி, அகிலவிராஜ் காரியவசம், ஆசு மாரசிங்க, ரஞ்சித் மத்தும பண்டார, திலும் அமுனுகம, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, மற்றும் ஏ.எச்.எம். ஹலீம் ஆகியோருக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தியை இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசத்தை எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகவேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆசு மாரசிங்க மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரிடம் எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது.

அத்துடன், மங்கள சமரவீர மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரிடம் செப்ரெம்பர் 3ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் திறப்பதில் சிக்கல் நிலை

கொழும்புபு ஓக 28

எதிர்வரும் மாதத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் முழுமையாகத் திறப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

அயல் நாடான இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று தீவிர வேகமாக பரவி வருகின்றது.

இதுவே விமான நிலையத்தைத் திறக்காமல் இருப்பதற்கான பிரதான காரணம் என விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரியாரச்சி தெரிவித்துள்ளார்.




அதற்கமைய விமான நிலையம் கால வரையின்றி தொடர்ந்து சுற்றுலா பயணிகளுக்காகத் திறக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# துன்னாலையில் இருவர் கைது!

யாழ்ப்பாணம்,ஒக 28

துன்னாலை குடவத்தைப் பகுதியில் இராணுவம், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற் கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களைக் கைது செய்வதற்காகவே நேற்று இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேடுதல் அதிகாலை 5 மணியிலிருந்து காலை 6 மணி வரையான ஒரு மணித்தியாலம் இடம்பெற்றது.

# வெளிநாட்டுப் பிரஜைகள் 13 பேர் கொழும்பில் கைது

கொழும்பு, ஓக.28

விசா காலாவதியான நிலையில் கல்கிஸை பகுதியில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 13 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சீனா மற்றும் தாய்லாந்தைச் சேர்ந்த 20 முதல் 44 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பூகொட விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தமைக்கு அமைய, கல்கிஸைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேரம் வீதி பிரதேசத்திலுள்ள விடுதியொன்றில் வைத்து இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறி, விசா இன்றி தங்கியிருந்த குற்றச்சாட்டில் 09 பெண்களும், 04 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெண்ணொருவர் சட்ட விரோதமான முறையில் வைத்திருந்த 10 ஆயிரத்து 300 சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகக் கல்கிஸைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# ஆவா வினோதன் உள்ளிட்ட 6 பேர் மானிப்பாயில் கைது

ஆவா வினோதன் உட்பட 6 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர். பிறந்தாள் கொண்டாட்டம் ஒன்றுக்காக 12 பியர் ரின்களுடன் தயாராகியபோது சந்தேக நபர்கள் 6 பேரும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வாள்வெட்டுக் குழு சந்தேக நபர்களுக்கு நீதிமன்றில் பிணையாக்கையொப்பமிட்ட ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் தலா 3 வழக்கு களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் கூறினர்.

"மானிப்பாய் - பொன்னாலை வீதி, துர்க்கா மில் பகுதியில் ஆவா வாள்வெட்டுக் குழுவின் வினோதன் உட்பட 6 பேர் கூடியுள்ளனர் என்று இரகசியத் தகவல் கிடைத்தது.

அந்த தகவலின் பிரகாரம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் ஆவா வினோதன் உள்ளிட்ட 6 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

ஆவா வினோதன் இணுவிலைச் சேர்ந்தவர். ஏனைய 5 பேரும் கைதடியைச் சேர்ந்தவர்கள். சந்தேக நபர்கள் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் வழக்கு நிலுவையோ அல்லது பிடியாணையோ இல்லை.

எனினும் சந்தேக நபர்களின் சந்தேகமான நடமாட்டத்தால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்பில் ஏனைய பொலிஸ் நிலையங்களில் வழக்கு நிலுவைகள் உள்ளனவா? என விசாரணைகள் நிறைவடைந்ததும் அவர்களைப் பிணையில் விடுவிப்பது தொடர்பில் ஆராயப்படும்.

இதேவேளை, வாள்வெட்டுக் கும்பல் ஒன்றின் சந்தேக நபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு பீடிக்குள் கஞ்சா போதைப்பொருளை மறைத்து நுகர முயன்ற குற்றச்சாட்டில் ஒருவரும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஐ.தே.கவுக்குத் தலைமை ஏற்குமாறு ருவனிடம் அனுதாபிகள் கோரிக்கை

கொழும்பு, ஒக 28

ஐக்கிய தேசியக் கட்சியின் அனுதாபிகள் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு தம்மை கோரி வருகின்றனர் என முன்னாள் ராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர்கள் தம் மீது நம்பிக்கை கொள்வார்களானால் கட்சியை வெற்றிப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்ட ஆதரவாளர்கள் அவரை நேற்று முன் தினம் மல்வானையில் உள்ள வீட்டில் சந்தித்தபோது இந்தக் கருத்தை அவர் வெளிப்படுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. இது திருத்தப்பட வேண்டும். கட்சியை வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று ருவன் விஜேவர்தன அங்கு குறிப்பிட்டார்.



எனவே, கட்சியின் மத்திய செயற்குழு இது தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

# கொடுத்த வாக்கை நிறைவேற்றும் அரசாகவே நாங்கள் இருக்கிறோம்

## இடைக்கால கணக்கறிகையை சமர்ப்பித்து பிரதமர் மஹிந்த நேற்று சபையில் உரை

கொழும்பு, ஒக 28

**நல்ல சுபீட்சத்தின் நோக்கு என்ற வேலைத் திட்டத்தை யதார்த்தமாக்குவதற்கு இந்த அரசுடன் ஒன்றிணையுமாறு பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற அரசாக இருக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.**

இடைக்கால கணக்கறிக்கையை நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் உரையாற்றுகையில்-

கடந்த பெப்ரவரி மாதத்தில் கடன்களை செலுத்துவதற்கு கோரியிருந்தேன் ஆனால் அன்று எதிர்க்கட்சி அதற்கு இடையூறு செய்தது. இதனால் தாமதம் ஏற்பட்டது.

இந்த பின்னணியில் தான் இன்று 2020ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

2020ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இருந்து டிசம்பர் வரையான நான்கு மாதங்களுக்கு அரசாங்க செலவுகளை செய்வதற்கு 1900 பில்லியன் ஒதுக்குவதற்கும் அதற்காக 1300 பில்லியன் கடன் எல்லையை அங்கீகரிப்பதற்காகத்தான் இந்த குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த எல்லா குறைநிரப்பு பிரேரணையும் 2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின்மூலம் நாங்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிப்போம்.

2019ஆம் ஆண்டு செலுத்தப்படாத பட்டியலை செலுத்துவதற்கு பெருமளவு தொகை தேவைப்படுகிறது. இதன்படி அரசாங்கத்தின் செலவு ஓரளவுக்கு முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அதிக பொருளாதார வளர்ச்சியை அடைந்து அரசின் வரவு-செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி முதலீட்டு மேம்பாட்டை செய்வதற்கு அடிப்படையிலேயே நடவடிக்கை எடுப்போம். அரசாங்கத்தின் செலவைக் குறைத்து பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பது எமது நம்பிக்கையான உள்ளது.

நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேறுகின்ற அரசாங்கமாக இருக்கின்றோம். தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளாக ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை தேர்தல் முடிந்து இரண்டு வாரங்களுக்குள் செய்திருக்கின்றோம்.

இந்த அரசைப் பொறுப்பேற்றபோது குண்டூசியில் இருந்து பெரிய பொருட்கள் வரை எல்லாமே இறக்குமதி செய்யப்பட்டன. புளி மட்டும் அல்லாது சுதேச கைத்தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலே பத்தி, மஞ்சள், மிளகு கூட இறக்குமதி செய்யப்பட்டன. பட்டங்கள் வெசாக் கூடுகள் கூட இறக்குமதி செய்யப்பட்டன. இதன்மூலம் உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊக்கமிழக்கச் செய்யப்பட்டனர்.

கடந்த காலங்களிலே எமது வெளிநாட்டு கையிருப்புக்கள் உண்மையிலேயே தேவையில்லாத பொருட்களை இறக்குமதி செய்வதற்குத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த பின்னணியில் எமது செலாவணி விழுக்காடு தேவையற்ற விதத்திலே ஏற்ற இறக்கம் கண்டன. இதன் விளைவை இன்று நாம் பார்க்கின்றோம்.

செலாவணி விழுக்காடை உறுதியான மட்டத்திலே பேணுவதற்கு எங்களால் முடிந்திருக்கின்றது. எமது உள்நாட்டு தொழில் முனைவோர்கள் கைத்தொழிலாளர்கள் என்று எல்லோரையும் வலுவூட்ட வேண்டியிருக்கின்றது. அதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசு இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்றது. நல்ல புரிதலுடன் பணியாற்றிக்கொண்டிருக்கின்றது.

நல்ல சுபீட்சத்தின் நோக்கு என்கின்ற வேலைத் திட்டத்தை யதார்த்தமாக்குவதற்கு இந்த அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு அனைவரிடமும் வேண்டுகொள் விடுக்கின்றோம்-என்றார்.

## இந்தியத் தூதுவர் நேற்று சபாநாயகருடன் சந்திப்பு!



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மரியாதையின் நிமிர்த்தம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். பின்னர் இந்தியத் தூதுவருக்குச் சபாநாயகர் மதியபோசன விருந்துபசாரத்தையும் வழங்கினார்.

மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்ற சபாநாயகராகப் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது வெளிநாட்டுத் தூதுவருடான சந்திப்பு இதுவாகும்.

## யாழில் மீண்டும் டெங்கு தாக்கம்: கடந்த வாரத்தில் 6 பேர் அனுமதி!

யாழ் மாவட்டத்தில் மீண்டும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதையடுத்து கடந்த வாரத்தில் 6 பேர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு,

கடந்த 17.08.2020 முதல் 23.08.2020 வரையான ஒரு வாரகாலத்தில் யாழ். மாவட்டத்திற்குட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேர் டெங்கு காய்ச்சல் தொற்றால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருமாக ஆறு பேர் இவ்வாறு டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் இவ்வாறு 17 பேர் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இவ்வருடம் 01.01.2020 தொடக்கம் 23.08.2020 வரையான காலப்பகுதியில் 894 பேர் டெங்கு தொற்றுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் இவ்வருடம் 01.01.2020 முதல் 30.07.2020 வரையான காலப்பகுதியில் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டளையை மீறி பயணித்த வாகனம் மீது பொலிஸ் சூடு!

கொழும்பு, ஒக 28

திவுலுப்பிட்டிய பகுதியில் காவற்துறை கட்டளையை மீறி பயணித்த ஜீப் ரக வாகனம் ஒன்று மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இருப்பினும் அந்த வாகனத்தில் வந்தவர்கள் தப்பி சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த வாகனத்தின் சாரதி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## இடைக்கால கணக்கறிக்கை நேற்று சபையில் சமர்ப்பிப்பு

பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ அடுத்த நான்கு மாதங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கையை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இந்த வருடத்தில் அடுத்த நான்கு மாதங்களுக்கான மொத்தச் செலவு செலவீனம் 1,747.68 பில்லியன் ரூபா என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போதைப் பொருளுடன் பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஒக 28

பொலிஸ் அதிகாரி ஒருவர் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிகடை பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் இருந்து 9 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 390 கிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

அம்பாறை தமண பகுதியில் வைத்தே இந்த பொலிஸ் அதிகாரி போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## 1000 ரூபாவுக்காக மூன்றிலிரண்டு பலத்தைப் பயன்படுத்தவேண்டும்

கொழும்பு, ஒக 28

**அரவிந்தகுமார் எம்.பி. கோரிக்கை**

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை முன்னெடுக்கவேண்டும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெறும் இடைக்கால கணக்கறிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என ஜனாதிபதித் தேர்தலின்போது இரு பிரதான கட்சிகளும் உறுதியளித்தன. தற்போது தேர்தல் முடிவடைந்துவிட்டது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசாங்கமும் வந்துள்ளது. ஆனாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு இன்னும் வழங்கப்படவில்லை. இது வேதனைக்குரிய விடயமாகும்.

பொதுத்தேர்தல் ஊடாக ஜனாதிபதியின் கரம் பலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விடயத்தில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும்-என்றார்.



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : நலம்தானா ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
டக்ஸிவெலா



மற்றும்
இன்டெலிஜன்ட்



திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : பல்துறைக் கருவூலம்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை
**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : வேர்களும் விருட்சங்களும்
10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் யோகிபாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைடம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.08.2020 அன்று வெளியிடப்பட்டது.